MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்
சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
MENMATHI KOVAI TAMIL MANDRAM
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# பெண் கவிஞர்களின் கவிதைகளில் இயற்கை

திருமதி து. உஷா

முனைவர் பட்ட ஆய்வாளர், (பகுதி நேரம்), நிர்மலா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை

முனைவர் ஜெஸிந்தா கிரேஸ்

ஆய்வு நெறியாளர், தமிழ்த்துறைத் தலைவர் (சுயநிதிப் பிரிவு) நிர்மலா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை

# Nature in the poems of female poets

Mrs. D.Usha

doctoral Researcher, (Part Time), Nirmala College of Arts and Science for Women, Coimbatore

Dr. Jacinda Grace

Research Supervisor, Head of Tamil Department (Self-Financed Unit) Nirmala College of Arts and Science for Women, Coimbatore

## ABSTRACT

Nature nourishes and develops both knowledge and feelings for man. Nature is inextricably intertwined with human life. Our hearts and minds are refreshed by seeing nature mixed with life. Those who have the ability to enjoy nature will be immersed in its beauty and enjoy it. With the aim of exploring the nature as a wonderful foundation for those who have the ability to create poetry to spread their wings of imagination and fly unhindered in the poetic sky,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

this article aims to examine the nature as a concept from the perspective of a 21st century female poet.

**முன்னுரை**

இயற்கை மனிதனுக்கு அறிவையும் உணர்வையும் ஒரு சேர ஊட்டி வளர்க்கிறது. மனித வாழ்க்கையிலிருந்து இயற்கையை பிரிக்க இயலாத வண்ணம் பின்னிப்பிணைந்துள்ளது இவ்வாறு வாழ்வோடு இரண்டற கலந்த இயற்கையை கண்டு நமது உள்ளமும் மனமும் புத்துணர்ச்சி கொள்கிறது .இயற்கையை இரசிக்கும் திறன் கொண்டோர் அதன் அழகில் தோய்ந்து இன்புற்று மகிழ்வார்கள். கவிதை படைக்கும் ஆற்றல் கொண்டோர் தம் கற்பனைச் சிறகை விரித்து கவிவானில் தடை இன்றி பறப்பதற்கு இயற்கையே சிறப்பான அடித்தளம் அமைத்து தருகிறது எனும் நோக்கில் 21 ஆம் நூற்றாண்டு பெண்கவிஞர் பார்வையில் இயற்கை எனும் பொருண்மையில் ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

இயற்கை,அழகு, பனித்துளிகள், கதிரவன், வானவில், புல், மலர்கள், ஐந்திணைகள்,பறவைகள், கவிஞர்கள்.

**இயற்கையின் சிறப்பு:**

கண்களையும் மனதையும் ஒருசேர கவருகிறது இயற்கை. இயற்கையின் அற்புத காட்சிகளைக் கண்டு மனம் மகிழாதவர்கள் இல்லை எனலாம். எல்லா காலகட்டங்களிலும் இயற்கை தன் கொடையை பாரபட்சமின்றி வழங்கிக் கொண்டுதான் இருக்கின்றது. இயற்கையோடு இணைந்து வாழும் போது தான் மனிதனும் இயற்கையை போல பயனுள்ள வாழ்வை வாழ முற்படுகின்றான். இயற்கையைப் பற்றி நக்கீரர்

**"கைப்புனைந் தியற்றாக் கவின் பெறு வனப்பு"1(நக்கீரர் திருமுருகாற்றுப்படை ப. 17)**

என்ற பாடல் வரியில் இயற்கையை நம் கைகளால் புனைந்து அதன் அழகை பெற இயலாது என்று குறிப்பிடுகிறார்.

**இயற்கையும் கவிஞனும்:**

இயற்கை பற்றி பெரும்பாலும் எல்லாக் கவிஞர்களும் பாடியுள்ளனர் எனலாம்.

**"கவிஞர்களின் கற்பனைக்கு அடிநிலையாக அமைந்தது இயற்கையே. இயற்கையோடு ஈடுபாடில்லாத கலைஞனும் கவிஞனும் இல்லை எனலாம்.2 (கா பிரபாகரி இலக்கிய திறனாய்வும் கொள்கைகளும் பக்கம் 261)** என்ற இவரின் கருத்துக்கு ஏற்ப நம் பெண் கவிஞர்களும் அவர்களுடைய கவிதை தொகுப்புகளில் இயற்கையை பற்றிப் பாடியுள்ளார்கள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

**இலக்கியத்தில் இயற்கை அமையும் விதம்:**

இலக்கியங்களின் வாயிலாக இயற்கையில் நிகழும் மாற்றங்களை அழகாக புனைந்து காட்டுகின்றனர் கவிஞர்கள். அதிகாலை நேரத்துப் புற்களில் காணப்படுகின்ற பனித்துளி முதல் இரவில் வானில் தோன்றும் நிலவு வரை எல்லா

வியத்தகு நிகழ்வுகளை எல்லாம் தங்கள் படைப்புகளில் பதிவு செய்யும் சிறப்பு கவிஞர்களுக்கு உண்டு.

> **"இலக்கியத்தில் இயற்கையைத் தரும் நிலைகள் பல உள. அவை இயற்கையை உள்ளவாறு காட்டுதல் இயற்கையை செயற்கையுடன் கலந்து தருதல்இ இயற்கையை அழகுறப் புனைதல், இயற்கையின் சில பல கூறுகளை தேர்ந்து ஒருங்கமைத்து அளித்தல் போன்றன"3(ச.வே சுப்ரமணியன் சங்க இலக்கிய கட்டுரைகள் பக்கம் 10)** என்பர் ச.வே சுப்ரமணியன்.

இலக்கியத்தில் இயற்கை அமையும் விதத்தைப் பற்றி அவர் இவ்வாறு வகைப்படுத்தி காட்டியுள்ளார். இவர் காட்டிய வகைகளில் நமது பெண் கவிஞர்கள்

இயற்கையை அழகுற புனைதல் என்னும் வகைமையைக் கையாண்டு இயற்கையை அழகாக நம் கண் முன்னே காட்சிப்படுத்திக் காட்டியுள்ளார்கள்.

**பனித்துளிகள்**

அதிகாலையில் எழுவதும் தூய்மையான காற்றை சுவாசிப்பதும் புற்களின் மேல் காணப்படும் பனித்துளிகளின் அழகை கண்டு களிப்பதோடு நின்று விடாமல் அதனை அழகுற கவிதையாக உருவாக்கும் எண்ணம் எத்தனை பேரின் மனதில் தோன்றுமோ தெரியவில்லை. ஆனால் கவிஞர் மரியதெரசா தம் கவிதையில்

**"வெள்ளைப் பூக்களாய்ப் பனி**

**அறுவடை செய்கின்றது ....**

**சூரியன்...."4**

**(மரிய தெரசா தூரிகை தேசம் ப.14-2)**

கவிதையில் பனித்துளிகளை வெள்ளை பூக்களாய் உருவகித்தும், அந்த பூக்களை சூரியன் அறுவடை செய்கிறது என்று கூறுவதும் இயல்பாக அன்றாடம் நடக்கும் நிகழ்வை கவிஞர் தம் பார்வையில் வர்ணித்து இருப்பது இயற்கையின் மீது அவர் கொண்டுள்ள காதலை வெளிப்படுத்தும் விதமாக அமைகிறது. மேலும் பனித்துளியைப் பற்றி கவிஞர்

**"வானமகளின் முத்துமாலை**

**அறுந்ததோ பனித்துளிகள்"5**

**(மரிய தெரசா தூரிகை தேசம் பக்கம் 11-3)**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

வானமகளின் முத்துமாலை அறுந்ததால் தான் பூமியில் பனித்துளிகள் என்று புற்களின் மேல் படர்ந்து இருக்கும் பனித்துளிகளை தன்னுடைய கற்பனை திறனால் வான மகளின் முத்துமாலையோடு ஒப்பிட்டுச் சொல்லக்கூடிய மனப்பாங்கு இயற்கையின் அழகை ரசிக்கக்கூடிய கவிஞர்களுக்கே உரித்தானது என்பதை அறிய முடிகிறது.

அதேபோல மற்றொரு பெண் கவிஞரான நிர்மலா சுரேஷ் அவர்களும் தன்னுடைய பங்குக்கு பனித்துளியை பற்றி தன் கவிதைகளின் வாயிலாக வெளிப்படுத்தி இருக்கிறார்.

**"ஜன்னல் கண்ணாடியில்**

**வெள்ளி ரோஜா....**

**இறுகிய பனி வடிவம்"6**

**(அந்தரத்தில் காய்த்த மஞ்சள் பூசணி நிர்மலா சுரேஷ் பக்கம் 26-3)**

அடர்ந்த பனிப் பிரதேசங்களில் ஜன்னல் கண்ணாடியில் பனித்துளிகள் இயல்பாக படர்ந்து இருப்பதை கவிஞர் வெள்ளி ரோஜாவோடு ஒப்பிட்டுச் சொல்வது கவிஞரின் கலை பார்வையினை எடுத்து இயம்புகிறது. இவ்வாறு பனித்துளியை கவிஞர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப பல வடிவங்களில் வடிவமைத்து நம் கண் முன்னே நிறுத்தியுள்ளனர் பெண் கவிஞர்கள் புல்லின் மேல் இருக்கும் பனித்துளியை கவிஞர் அ.இசாக் ஒரு படி மேலே சென்று

**"நீர்பந்துவைத்**

**தலையில் சுமந்த புல்**

**அதிகாலைப் பனித்துளி"7**

**(அ.இசாக் முன் அறிவிப்பு பக்கம் 13-2)**

அதிகாலை நேரங்களில் புற்களில் படர்ந்து இருக்கும் பனித்துளிகளை புற்கள் தன் தலையில் நீர் பந்துவை சுமந்து கொண்டிருக்கிறது என்றும் மற்றொரு கவிஞர் புற்கள் தன் தலையில் முண்டாசு கட்டியிருப்பதாக கூறுவது கவிஞர்கள் இயற்கையை நேசிக்கும் விதத்தை எடுத்துரைக்கிறது.

சங்க இலக்கியங்களில் ஐந்திணைகளில் ஒன்றான நெய்தல் திணைக்கு உரிய மலர் நெய்தல் பூ அந்த நெய்தல் பூ விடியற்காலை பனித்துளியில் எவ்வாறு காட்சியளிக்கிறது என்பதை கவிஞர் சக்தி ஜோதி

**"பனிப்பொழிகையில்**

**கூம்பிக் கிடக்கின்றன நெய்தல் மலர்கள்"8**

**(கவிஞர் சக்தி ஜோதி பக்கம் 16 மூங்கிலரிசி வெடிக்கும் பருவம்)**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

மேலும் பனிக்காலத்தை கவிஞர் பனிக்கால நினைவுகள் என்னும் கவிதையில்

**"இந்தப் பனிக்காலம்**

**எப்பொழுதுமே இயற்கைக்கு**

**மிகப் பக்கமாக நம்மை**

**வைத்துக் கொண்டிருக்கிறது"9**

**(கவிஞர் சக்தி ஜோதி பக்கம் 75 மூங்கிலரிசி வெடிக்கும் பருவம்)**

பனிக்காலம் இயற்கையும் மனிதனையும் ஒன்றிணைக்க கூடியதாக அமைந்துள்ளது என்பதற்கு சான்றாக மேலே குறிப்பிட்ட கவிதைகள் வாயிலாக அறிய முடிகிறது.

**கதிரவன்**

அன்றாடம் எழும் கதிரையும் கவிஞர்கள் வருணிக்க தவறவில்லை அன்றாடம் கதிரவன் தோன்றும் நிகழ்வினை கவிஞர்

**"கதிரவன் வந்து**

**கடமையைச் செய்ய**

**எழுப்புகிறான்"10**

**(பக்கம் 58 ஓடும் நதியும் உறங்கும் கூழாங்கற்களும்)**

கதிரவன் உதயமான பிறகு தான் மனிதர்கள் பெரும்பாலும் தங்களுடைய அன்றாட பணிகளை தொடங்குகின்றர். எனவே கதிரவன் வந்து கடமையை செய்ய எழுப்புவதாக கவிஞர் கூறுகிறார்.

பாரதியார் அவர்கள் காலைப் பொழுதினை பற்றி கூறும் பொழுது

**"பொழுது புலர்ந்தது**

**யாம் செய்த தவத்தால்**

**முதன்மை யிருட்கணம் போயினயாவும்"11**

**(பாரதியார் பாரதியார் கவிதைகள் பக்கம் 153)**

**"கதிரவன்**

**வான வீதியில்**

**உலா போகும் ஆயத்தமாகும் நேரம்"12**

**(மித்ரா நிரந்தர நிழல்கள் பக்கம் 11)**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

என்கிறார் கவிஞர். கதிரவன் உலா போக ஆயத்தமாகும் நேரத்தையே காலைப் பொழுது என கவிஞர் வருணிக்கிறார்.

என்று நம் அன்றாடம் காண்கின்ற காட்சிகளை கவிஞர்கள் கவிதையாக வருணித்து சொல்லுகின்ற விதமும் நம்முடைய பார்வையில் இருந்து விலகி அவர்கள் பார்க்கின்ற

வேறுபட்ட பார்வை நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. இயற்கையை ரசிக்கும் விதமாக இக்கவிதைகள் நம்மை உணர்த்துகிறது.

**நட்சத்திரம்**

நட்சத்திரங்கள் பற்றி ஒவ்வொரு கவிஞர்களும் தங்களுடைய கற்பனைக்கு ஏற்றார் போல அழகாக தங்களுடைய கவிதைகளில் காட்சிப்படுத்தி இருக்கிறார்கள் .இரவு நேரத்தில் கருமை நிற வானத்தில் கோடிக்கணக்கான தீபங்கள் ஏற்றினது போல நட்சத்திரங்கள் காட்சியளிக்கும் இக்காட்சியை காண்போருக்கு மகிழ்ச்சியையும் வியப்பையும் ஒரு சேர தருகிறது ஒவ்வொரு நாளும். நட்சத்திரங்களைப் பற்றி கவிஞர் மரிய தெரசா

**"சூரியனை விற்ற**

**வெள்ளிக் காசுகளோ**

**விண்மீன்கள்"13**

**(பக்கம் 34 ஒரு தேவதையின் முந்தானை)**

சூரியன் மறைவுக்குப் பின் இரவில் தோன்றக்கூடிய நட்சத்திரங்களை கவிஞர் வெள்ளி காசுகளோடு ஒப்பிடுகிறார்.

மற்றொரு பெண் கவிஞரான கவிஞர் மித்ரா அவர்களும் நட்சத்திரத்தைப் பற்றி தன்னுடைய கவிதைகளில் கூறும் பொழுது

**"வான மங்கை முகத்தில்**

**இயற்கை என்னும் குறும்புக்காரன்**

**வாரி இறைத்திட்ட**

**வெள்ளை மலர்கள் நீங்கள்"14**

**(மித்ரா நிரந்தர நிழல்கள் பக்கம் 23)**

இக்கவிதையில் கவிஞர் வான மங்கையின் முகத்தில் வாரி இறைத்திட்ட வெள்ளி மலர்களாக காட்சி தருகின்றது நட்சத்திரங்கள்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

இளம்பிறை அவர்களும்

**"அடர் கரும் கேசத்தில்**

**செருக்கப்பட்ட**

**அலங்காரச் சிட்டிப்பூக்கள்**

**நிலவும் நட்சத்திரங்களும்"15**

**(பக்கம் 93 நீ எழுத மறுக்கும் எனதழகு)**

கவிதைகள் கவிஞர் நட்சத்திரங்களை பூக்களாக காட்சி படுத்திக் காட்டியுள்ளார்

மழை வந்து நின்றபின் சூரியன் தோன்றும் போது சில நிமிடங்கள் மட்டும் தோன்றும் வானவில்லை பற்றி கவிஞர்கள் கீழ்கண்டவாறு கூறுகிறார்கள் ஏழு வண்ணங்களால் வானத்தை அழகாக்கும் வானவில்லை பற்றி நான் காமராசர் கூறும் பொழுது

**"இயற்கை ஒரு தூரிகையைச்**

**சிருஷ்டிக்க எண்ணி**

**ஒரு ஓவியத்தை சிருஷ்டித்தது**

**அதுதான் வானவில்"16**

**(நா. காமராசன் கருப்பு மலர்கள் பக்கம் 51)**

என்கிறார் வானவில்லை ஒரு ஓவியமாக கவிஞர் குறிப்பிட்டிருப்பதை அறிய முடிகிறது.

**"ஏழு வண்ணத்தில் உடுத்தி வந்தவளைக்**

**கடத்தியது யார்**

**வானவில்"17**

**(மரிய தெரசா தூரிகைதேசம் பக்கம் 32 -2)**

மழை வந்து நின்ற பின் வானில் தோன்றும் வானவில் தோன்றிய உடனேயே மறைந்து விடுவது இயல்பு அப்படி மறைந்து போகும் வானவில்லை யாரோ கடத்திச் சென்றதாக கற்பனைத்தோடு நயம்படக் கூறியிருப்பது கவிஞரின் கவித்திறமையை பறைசாட்டுகிறது எனலாம்.

மற்றொரு கவிதையில் வேண்டுகோள் என்னும் தலைப்பில்

**"வானவில்லே ! வானவில்லே**

**குட்டி போடு**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

**வண்ணங்களில் எண்ணிக்கை**

**எங்களுக்குப் போதவில்லை"18**

**(மெழுகு மீசைகள் பக்கம் 56)**

இக்கவிதையில் வானவில்லில் காணப்படும் ஏழு வண்ணங்களில் மயங்கிய கவிஞர் வண்ணங்கள் போதவில்லை இன்னும் வண்ணங்கள் வேண்டும் என்று கவிஞர் வானவில்லுக்கு வேண்டுகோள் விடுப்பதாக கவிதை அமைந்துள்ளது.

**பறவைகள்**

பறவைகளின் இனிமையான ஓசையைக் கேட்டுத்தான் ஒவ்வொரு நாள் அதிகாலையிலும் மனிதன் கண் விழிக்கிறான் மூவறிவு உயிரினம் என்று

சொல்லப்படும் பறவைகளின் ஓசை இனிமையானது ஒவ்வொரு பறவைகளுக்கும் ஒவ்வொரு விதமான ஓசைகள் அந்த ஓசைகள் பறவைகளுக்கு பறவைகள் வேறுபடும்

அதனுடைய இனிமையான ஓசையை கேட்பதற்கும் அதன் அழகிய தோற்றம் பார்ப்பதற்கும் எப்போதுமே புத்துணர்ச்சியும் மகிழ்ச்சியும் மனதிற்கு தருகிறது என்று சொன்னால் மிகையாகாது.

**"விடியற் காலை**

**கதவை திறக்கும்**

**பறவை இனம்"19**

**(பக்கம் 46 ஒரு தேவதையின் முந்தானை மரிய தெரசா)**

ஒவ்வொரு விடியலின் கதவை பறவைகளின் இனிமையான ஓசை தான் திறந்து வைக்கிறது என கவிஞர் வருணிக்கிறார் மற்றொரு பெண் கவிஞரான கவிஞர் சத்யஜோதி அவர்களும்

**"குயிலோசை கேட்டு விழித்தாள்"20**

**(பக்கம் 33 மூங்கிலரிசி வெடிக்கும் பருவம்)**

என அதிகாலையில் குயிலின் ஓசையை கேட்டு தான் கண் விழிப்பதாக கவிஞர் குறிப்பிட்டிருக்கிறார்.

கண்ணாடியை பற்றி அறியாத குருவி கண்ணாடியில் தன்னையே பார்த்துக் கொண்டு வேறு பறவை என நினைத்து விளையாடும் வேடிக்கையான செயலை கவிஞர் நிர்மலா சுரேஷ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

**"இணை தேடும் சிட்டுக்குருவி**

**வீட்டுக் கண்ணாடியை**

**அலகால் கொத்தும்"21**

**(பக்கம் 23 அந்தரத்தில் காய்த்த மஞ்சள் பூசணி நிர்மலா சுரேஷ்)**

என்னும் கவிதையில் சிட்டுக்குருவி கண்ணாடியில் தன் உருவத்தை பார்த்து வேறு பறவையே என நினைத்து தன்னுடைய அலகால் கண்ணாடியை கொத்திக் கொத்தி விளையாடும் இக்காட்சியை பற்றி மற்றொரு கவிஞர் வசீகரன்

**"தன்னையே காதலிக்கும்**

**ஒற்றைச் சிட்டுக்குருவி**

**கண்ணாடியில் அலகுகொத்தி"22**

**(வசீகரன் பறபற பக்கம் 8-1)**

எனக் கவிஞர்களின் ஒற்றை சிட்டுக்குருவி செய்யும் சேவைகளை கவிதையின் மூலம் நம் கண் முன்னே கொண்டு வருகிறார். ஒற்றை சிட்டுக்குருவி இரசித்த கவிஞர்கள் இரண்டு பறவைகள் இணைந்திருக்கும் காட்சியையும் வருணிக்க தவறவில்லை

**"ஊஞ்சலாடும்**
**காதற் பறவைகள்**
**கூண்டுக்குள்"23**
**(பக்கம் 66 அந்தரத்தில் காய்த்த மஞ்சள் பூசணி நிர்மலா சுரேஷ்)**

எனக் கூண்டுக்குள் காதல் பறவைகள் இரண்டும் மகிழ்ச்சியோடு ஊஞ்சலாடுகிறது இக் காட்சியை கவிஞர் தம் கவிதையில் குறிப்பிட்டுள்ளார். மற்றொரு கவிஞர் மரத்தடியில் வசிக்கும் காதல் பறவைகள் பற்றி

**"மரத்தடி நிழலில்**
**காதல் செய்கின்றன சிட்டுக்குருவிகள்"24**
**(நாணற்காடன் பிரியும் நேரத்தில் பக்கம் 16- 2)**

என்று மரத்தடி நிழலில் சிட்டுக்குருவிகள் காதல் செய்கின்றதாக கவிஞர் அழகாக எடுத்துக்காட்டுகிறார். அதிகாலையில் பறவைகள் எழுப்பக்கூடிய ஓசையை கவிஞர் வெண்ணிலா அவர்கள் தம் கவிதையில் இவ்விதமாக குறிப்பிடுகிறார்

**"இரவின் மவுனத்தை**
**விடிந்தும் விடியாமலும்**
**மரத்திடம் சலசலக்கின்றன பறவைகள்"25**
**(பக்கம் 256 எரியத் துவங்கும் கடல் கவிஞர் வெண்ணிலா )**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

காலை நேரத்தில் பறவைகள் மரத்தில் அமர்ந்து சத்தமிடும் இதனை கவிஞர் மரத்திடம் பறவைகள் சலசலப்பதாக குறிப்பிடுகிறார்.

இவ்வாறாக பறவைகள் எழுப்பும் ஓசை மனிதனுக்கு மகிழ்ச்சியை தருவது போல வேறு எந்த இசையும் அந்த மகிழ்ச்சியை தந்து விடாது என்பதை மேற்கண்ட கவிதைகள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

**முடிவுரை**

இயற்கை என்பது மனித குலத்திற்கு கிடைத்த மிகப்பெரிய நன்கொடை ஆகும.; அத்தகைய இயற்கை வளங்களை போற்றி பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையும் ஆகும் இயற்கை அழகினை பெண் கவிஞர்கள் தங்கள் கவிதைகள் மூலம் மேலும் அழகு படுத்திக் காட்டியுள்ளார்கள். இயற்கை மீது பெண் கவிஞர்கள் கொண்டுள்ள அன்பினை பல வகைகளில் உணர முடிகிறது. அதிகாலை வேளையில் புற்களின் மேல் காணப்படும் பனித்துளிகள் அதிகாலையில் பறவைகள் எழுப்புகின்ற இனிமையான ஒலிகள் எழு கதிரவனின் பணிகள் மழை பெய்யும் போது தோன்றுகின்ற வானில் போன்ற இயற்கை காட்சிகள் மக்கள் மனதில் வியப்பை ஏற்படுத்துகிறது. இக்கவிதைகளை படிப்பதன் மூலம் எத்தனையோ இயற்கை அழகை நாம் இரசிக்க தவறிவிட்டோம் என்பதை இக்கவிதைகள் நமக்கு உணர்த்துகிறது. இயற்கையை இரசிக்க இரசிக்க நம் உள்ளுணர்விலே ஒருவிதம்

மகிழ்ச்சி நம்மை ஆட்கொள்வதை உணர முடிகிறது. சங்ககால மக்கள் மட்டும் இயற்கையோடு வாழ்ந்த வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என்று கூறுவதை விட இந்த தலைமுறையினரும் இயற்கையோடு இணைந்து தான் வாழ்கிறோம் என்பதை உறுதிப்படுத்தும் விதமாக இயற்கையை நேசிப்போம் இயற்கையை பாதுகாப்போம்.

**சான்றெண் குறிப்புகள்:**

**1.நக்கீரர் திருமுருகாற்றுப்படை ப. 17**

**2.கா பிரபாகரி இலக்கிய திறனாய்வும் கொள்கைகளும் பக்கம் 261**

**3.ச.வே சுப்ரமணியன் சங்க இலக்கிய கட்டுரைகள் பக்கம் 10**

**4.மரிய தெரசா தூரிகை தேசம் ப.14-2**

**5.மரிய தெரசா தூரிகை தேசம் பக்கம் 11-3**

**6.அந்தரத்தில் காய்த்த மஞ்சள் பூசணி நிர்மலா சுரேஷ் பக்கம் 26-3**

**7.அ.இசாக் முன் அறிவிப்பு பக்கம் 13-2**

**8.கவிஞர் சக்தி ஜோதி பக்கம் 16 மூங்கிலரிசி வெடிக்கும் பருவம்**

**9.கவிஞர் சக்தி ஜோதி பக்கம் 75 மூங்கிலரிசி வெடிக்கும் பருவம்**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :1 /Issue 1 / MARCH 2025 eISSN 3049-3676 (Online)

**10.பக்கம் 58 ஓடும் நதியும் உறங்கும் கூழாங்கற்களும்**

**11.பாரதியார் பாரதியார் கவிதைகள் பக்கம் 153**

**12.மித்ரா நிரந்தர நிழல்கள் பக்கம் 11**

**13.பக்கம் 34 ஒரு தேவதையின் முந்தானை**

**14.மித்ரா நிரந்தர நிழல்கள் பக்கம் 23**

**15.பக்கம் 93 நீ எழுத மறுக்கும் எனதழகு**

**16.நா. காமராசன் கருப்பு மலர்கள் பக்கம் 51**

**17.மரிய தெரசா தூரிகைதேசம் பக்கம் 32 -2**

**18.மெழுகு மீசைகள் பக்கம் 56**

**19.பக்கம் 46 ஒரு தேவதையின் முந்தானை மரிய தெரசா**

**20.பக்கம் 33 மூங்கிலரிசி வெடிக்கும் பருவம்**

**21.பக்கம் 23 அந்தரத்தில் காய்த்த மஞ்சள் பூசணி நிர்மலா சுரேஷ்**

**22.வசீகரன் பறபற பக்கம் 8-1**

**23.பக்கம் 66 அந்தரத்தில் காய்த்த மஞ்சள் பூசணி நிர்மலா சுரேஷ்**

**24.நாணற்காடன் பிரியும் நேரத்தில் பக்கம் 16- 2**

**25.பக்கம் 256 எரியத் துவங்கும் கடல் கவிஞர் வெண்ணிலா**